Dhinathdhalam@gmail.com
www.dhinathdhalam.com

**விளம்பரதாரர்கள் தேவை**

தமிழகம் முழுவதும் 234
சட்டமன்ற தொகுதிகளுக்கும்
செய்தி – விளம்பரம்
சேகரிக்க முழு நேர – பகுதி நேர
பணிக்கு தகுந்த ஆட்கள் தேவை.

☎ 9 111 222 654

# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556
நடுநிலை நாளிதழ்
DHINATH DHALAM Tamil & English daily Paper

**செய்தியாளர்கள் தேவை**



தமிழகம் முழுவதும்
மாவட்டம் & தாலுகா
வாரியாக சந்தாதாரர்
அடிப்படையில்
ஆண்/பெண்
நிருபர்கள் தேவை

☎ 94440 82959

ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D.,
நிர்வாக ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

மலர் Volume : 01 | இதழ் Issue : 029 | புதன்கிழமை Wednesday | 29.04.2026 | பக்கங்கள் Pages:4 | ₹ 6 | ஈரோடு Erode

# தமிழ்நாடு தெற்காசியாவில் முன்னணி மாநிலமாக உயர வேண்டும் என்பதே இலக்கு

## முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் பேச்சு



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், தனது எக்ஸ் வலைதள பக்கத்தில், "தமிழ்நாடு என்றாலே சாதனை, சாதனை,சாதனை.திராவிட மாடல் தனித்துவமான மாடல். சொன்னதை, எண்களிலும் நிரூபித்துக் கொண்டிருக்கிறோம்.முதல்மூன்றாண்டுகளில் அடித்தளம் அமைத்து,

இப்போது தொடர்ந்து இரண்டாண்டுகளாக இரட்டை இலக்க வளர்ச்சி என்ற சாதனையை நிகழ்த்தியுள்ளோம். சிறப்பான நமது நிர்வாகத்திற்கு,உழைப்பால் துணை நின்ற தமிழ்நாட்டு மக்களுக்கு நன்றி.

இது தொடக்கம்தான். உங்கள் துணையோடு இன்னும் பல உயரங்களை அடைவது உறுதி. நம்முடைய போட்டி என்பது மற்ற இந்திய மாநிலங்களுடன் அல்ல; தெற்காசியாவில் முதன்மை மாநிலமாகத் தமிழ்நாடு உயர வேண்டும்." என்று அவர் கூறியிருக்கிறார்.

முதல்வர் ஸ்டாலினின் இந்தப் பதிவை பகிர்ந்துள்ள தமிழக நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு, "தொடர்ந்து 2-வது நிதி ஆண்டாக இரட்டை இலக்க பொருளாதார வளர்ச்சியைப் பதிவு செய்து இந்தியாவையே திரும்பிப் பார்க்க வைத்துள்ளது நம் தமிழ்நாடு. எந்தத் தடையையும் தகர்த்து, தமிழ்நாட்டை முதன்மை மாநிலமாக நிலைநிறுத்திவரும் நம் மாண்புமிகு முதலமைச்சர் மு.க ஸ்டாலின் என்ற தொலைநோக்குப் பார்வைக் கொண்ட தலைவனின் கனவுகளும் உழைப்புமே இதற்கு மூல முதற்காரணம்.

தொழில் வளர்ச்சி, உட்கட்டமைப்பு மற்றும் சரியான திட்டமிடல் என அனைத்துத் துறைகளிலும் முதல்வர் காட்டி வரும் அக்கறையே, இன்று நம் மாநிலத்தை இந்தச் சிகரத்தில் ஏற்றி வைத்துள்ளது. வளர்ச்சி நாயகன் தலைமையில் திராவிட மாடல் 2.0-வில் தமிழ்நாடு இன்னும் பல சாதனைகளைப் புரியும்" என்று அவர் கூறியுள்ளார்.

அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா நெகிழ்ச்சி

அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா தனது எக்ஸ் வலைதள பக்கத்தில், "திராவிட_மாடல் ஆட்சியில் கடந்த இரண்டு ஆண்டுகளாக தொடர்ந்து இரட்டை இலக்க வளர்ச்சி கண்டுள்ளது, திராவிட நாயகன் மு.க ஸ்டாலின் அவர்களின் அரவணைப்பில் வளரும் நம் #தமிழ்நாடு !

இது சாதாரண வளர்ச்சி அல்ல, திட்டமிட்ட முன்னேற்றம் என்பதையே இது நிரூபிக்கிறது.

இதுவே அனைவரையும் உள்ளடக்கிய பரவலாக்கப்பட்ட திராவிட மாடல் வளர்ச்சி. இதில் முக்கிய தகவல் என்னவென்றால்,இந்திய அளவில் இது அதிகம் என்பதைக் கடந்து, ஏற்கனவே உயர்ந்து இருக்கும் ஒரு மாநிலம் இவ்வளவு வேகத்தில் வளர்வது உலக அளவிலும் அரிது.

இது சாதாரணமாக கிடைத்த வளர்ச்சி அல்ல. உழைப்பு உழைப்பு உழைப்பு மிகக் கடின உழைப்பினால் கிடைத்த வெற்றி. தி.மு.க ஆட்சியின் முந்தைய காலங்களிலும் இதேபோன்ற வலுவான வளர்ச்சி பதிவாகியுள்ளது. தொடர்ந்து 15-20 ஆண்டுகள் இப்படியான வளர்ச்சி நடந்தால்,சீனா, தென் கொரியா போன்ற வளர்ச்சி இங்கேயும் நிச்சயம் சாத்தியம்தான்.

2030க்குள் தமிழ்நாட்டை 1 டிரில்லியன் அமெரிக்க டாலர் பொருளாதாரமாக மாற்றும் இலக்கை உறுதியாக தனது கையில் எடுத்துள்ளார் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள். இந்த வளர்ச்சி அடுத்த 5 ஆண்டுகளும் தொடரும். இந்த பாதையை வலுப்படுத்தி, முதலீடு, தொழில், வேலைவாய்ப்பு வளர்ச்சியை முன்னெடுத்து வரும் மாண்புமிகு திராவிட நாயகன் அவர்களின் முயற்சிகளுக்கு கிடைத்த வெற்றி இது.

தமிழ்நாடு வளர்கிறது. தமிழ்நாடு வழிகாட்டுகிறது. தமிழ்நாடு தொடர்ந்து வெல்லும்." என்று அவர் கூறியுள்ளார்.

# "மொழி, பிராந்தியவாதம் மூலம் நாட்டில் பிளவுகளை விதைக்க முயற்சி" சிக்கிமில் பிரதமர் மோடி பேச்சு



காங்டாக்: மொழி மற்றும் பிராந்திய அடிப்படையில் நாட்டைப் பிளவுபடுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வரும் வேளையில், சிக்கிம் 'ஒரே பாரதம், சிறந்த பாரதம்' என்ற தொலைநோக்குப் பார்வையை வெளிப்படுத்தி வருகிறது என்று பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்தார். காங்டாக்கில் உள்ள பால்ஜோர் மைதானத்தில் நடைபெற்ற சிக்கிம் மாநில அந்தஸ்து பெற்ற 50-வது ஆண்டு விழாவில் உரையாற்றிய பிரதமர் மோடி, "இன்று நாம் சிக்கிமின் 50-வது ஆண்டு விழாவைக் கொண்டாடுகிறோம். ஒரு நிகழ்வு வரலாற்றுச் சிறப்புமிக்கதாகவும், இத்தகைய தெய்வீகமான சூழலில் நடைபெறும்போதும், அதன் மகத்துவம் பன்மடங்கு பெருகுகிறது. இந்த மைதானம் அந்த அற்புதமான ஒளிவட்டத்தால் நிரம்பியுள்ளது. கலைஞர்களையும் நடன அமைப்பாளர்களையும் நான் வாழ்த்துகிறேன். ஊடகங்கள் இந்த நிகழ்வை மீண்டும் மீண்டும் ஒளிபரப்ப வேண்டும் என்று நான் விரும்புகிறேன்.

அரசியல் நலன்களுக்காக, மொழிவாதம், பிராந்தியவாதம் மற்றும் சமூகப் படிநிலை போன்றவற்றின் அடிப்படையில் நாட்டில் பிளவுகளை விதைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும் ஒரு காலகட்டத்தில், ஒரே இந்தியா, மாபெரும் இந்தியா என்ற தொலைநோக்குப் பார்வையின் உண்மையான ஒரு காட்சியை சிக்கிம் இன்று நமக்கு வழங்கியுள்ளது. இந்தச் சிறிய நிகழ்ச்சியில், அவர்கள் நமது தேசத்தின் பன்முகத்தன்மையையும் ஒற்றுமையையும் அழகாக வெளிப்படுத்தியுள்ளனர். நேற்றிரவு மழையும், இப்போது சூரிய ஒளியும். சிக்கிமின் வண்ணங்கள் உண்மையிலேயே தனித்துவமானவை. சிக்கிம் கிழக்கின் பெருமை.

எனது சாலைப் பேரணியின் போது எனக்கு மிகவும் பிடித்த விஷயம் எதுவென்றால், அது சிக்கிமின் சாலைகளில் நிலவிய தூய்மைதான்.

இதற்காக உங்கள் அனைவருக்கும் நான் எனது வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். சிக்கிம் மக்கள் இயற்கையின் உண்மையான தூதுவர்களாகத் திகழ்கின்றனர். எனவே, நாட்டின் மக்கள் அனைவரும் சிக்கிமிற்கு வருகை தருமாறு நான் கேட்டுக்கொள்கிறேன்" என்றார்.

முன்னதாக ,சிக்கிம் மாநிலம் உருவானதன் 50-வது ஆண்டு நிறைவு விழாவின் நிறைவு நிகழ்ச்சியில், சிக்கிமில் 4,000 கோடி ரூபாய்க்கும் அதிகமான மதிப்புள்ள பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை பிரதமர் மோடி தொடங்கி வைத்தும், அவற்றுக்கான அடிக்கல்லை நாட்டியும் வைத்தார்.

## வரி விளம்பரங்கள்



தினத்தளம்
DHINATH DHALAM

| | | |
|---|---|---|
| மணமாலை | கோவில் திருவிழா | அரசியல் நிகழ்வுகள் |
| கல்வி | திருமண நாள் | பிறந்த நாள் |
| ஆண்டு விழா | திறப்பு விழா | வீட்டு சுப நிகழ்ச்சிகள் |
| நினைவு நாள் | ரியல் எஸ்டேட் | பைனான்ஸ் |
| நகைக்கடன் | வேலை வாய்ப்பு | ஆட்டோமொபைல் |

தொடர்புக்கு : ☎ +919444082959

# வெப்ப அலை எச்சரிக்கை: தமிழகம் உள்ளிட்ட 21 மாநிலங்களுக்கு மனித உரிமைகள் ஆணையம் முக்கிய உத்தரவு



நாட்டில் அதிகரித்து வரும் கடுமையான வெப்ப அலைகளினால், குறிப்பாகத் தங்குமிடம் மற்றும் வசதிகள் இல்லாத எளிதில் பாதிப்புக்குள்ளாகக்கூடிய மக்களின் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளதைச் சுட்டிக்காட்டி, தமிழ்நாடு உட்பட 21 மாநிலங்களுக்கு இந்திய தேசிய மனித உரிமைகள் ஆணையம் அவசர அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளது.

போதிய தங்குமிடம் மற்றும் வசதிகள் இல்லாத நிலையில், வெப்ப அலைகளால் பொருளாதாரத்தில் நலிவடைந்த பிரிவினர், வெளிப்புறத் தொழிலாளர்கள், முதியவர்கள், குழந்தைகள், பச்சிளம் குழந்தைகள் மற்றும் குறிப்பாக வீடற்றவர்கள் என எளிதில் பாதிப்புக்குள்ளாகக்கூடிய மக்கள் எதிர்கொள்ளும் அபாயங்களை தேசிய மனித உரிமைகள் ஆணையம் சுட்டிக்காட்டியுள்ளது. மாநிலங்களில் தற்போதுள்ள நிலையான வழிகாட்டு நெறிமுறைகள் அல்லது தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையத்தின் (என்.டி.எம்.ஏ) வழிகாட்டுதல்களின்படி, வெப்ப அலைகளின் தாக்கத்தைக் குறைக்கவும், உயிரிழப்புகளைத் தடுக்கவும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்த அறிக்கைகளைச் சமர்ப்பிக்க தேசிய மனித உரிமைகள் ஆணையம் அறிவுறுத்தியுள்ளது. மக்களைப் பாதுகாப்பதற்காக முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளவும், நிவாரண நடவடிக்கைகளைச் செயல்படுத்தவும் ஆந்திரப் பிரதேசம், அசாம், பீகார், சத்தீஸ்கர், குஜராத்,ஹரியானா,இமாச்சலப் பிரதேசம், ஜார்கண்ட், கர்நாடகா, கேரளா,மத்தியப் பிரதேசம், மகாராஷ்டிரா, ஒடிசா, பஞ்சாப், ராஜஸ்தான், சிக்கிம்,தமிழ்நாடு, தெலங்கானா, திரிபுரா, உத்தரப் பிரதேசம் மற்றும் மேற்கு வங்கம் ஆகிய 21 மாநிலங்கள் மற்றும் டெல்லி யூனியன் பிரதேசங்களைக் கேட்டுக்கொண்டுள்ளது.

தீவிரம் அதிகரித்து வருவது, போதிய தங்குமிடம் மற்றும் வசதிகள் இல்லாத காரணத்தால் ஒதுக்கப்பட்டவர்கள், பொருளாதாரத்தில் நலிவடைந்த பிரிவினர், வெளிப்புறத் தொழிலாளர்கள் மற்றும் வீடற்றவர்கள் போன்ற எளிதில் பாதிப்புக்குள்ளாகக்கூடிய மக்களைப் பெருமளவில் பாதிக்கிறது என்று ஆணையம் கவனித்துள்ளது. முதியவர்கள், குழந்தைகள், கைக்குழந்தைகள் மற்றும் பச்சிளம் குழந்தைகள் கடுமையான வெப்பத்தினால் ஏற்படும் உடல்நலப் பாதிப்புகளுக்கு அதிகளவில் ஆளாகின்றனர். கூடுதலாக, வெப்ப அலைகளின் தாக்கம் வாழ்வாதார இழப்புக்கும், தீ விபத்துக்கள் ஏற்படும் அபாயத்திற்கும் வழிவகுக்கின்றன.

**செய்திகள்**
**உடனுக்குடன் படிக்க**

தினத்தளம்
DHINATH DHALAM

**வாட்ஸ் அப் குரூப்பில் இணையுங்கள்**

Join my WhatsApp group.
https://chat.whatsapp.com/CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt



ஈரோடு மாவட்டத்தில் அக்னி நட்சத்திரம் தொடங்குவதற்கு முன்பே வெயிலின் தாக்கம் கடுமையாக உள்ளது. கடந்த சில நாட்களாக மாவட்டத்தின் பல பகுதிகளில் வெப்பநிலையானது 102 முதல் 104 டிகிரி பாரன்ஹீட் வரை பதிவாகி வருவதால், அனல் காற்றால் பொதுமக்கள் பெரும் அவதிக்கு உள்ளாகி உள்ளனர். இந்தச் சூழலில், கோடை விடுமுறை மற்றும் வார இறுதி நாட்களை ஒட்டி, ஞாயிற்றுக்கிழமை அன்று குளிர்ச்சியை அனுபவிக்க கொடிவேரி அணையில் மக்கள் குவிந்தனர்.



மதுரை ஒத்தக்கடை பகுதியில் மதுரை மாநகர் மேல பெருமாள் மேஸ்திரி வீதியில் இயங்கி வரும் மதுரை டவுன் தேநீரகத்தின் இரண்டாவது கிளை தொடங்கப்பட்டுள்ளது. இதன் திறப்பு விழாவில் தூய்மை பணியாளர்களை கௌரவிக்கும் விதமாக தூய்மை பணியாளர்களை சிறப்பு விருந்தினர்களாக அழைத்து வரப்பட்டு திறக்கப்பட்டது. தொடர்ந்து தூய்மை பணியாளர்களுக்கு சால்வை அணிவிக்கப்பட்டு மரியாதை செய்யப்பட்டது. இந்நிகழ்வில் சிவகங்கை சீமையார் எஸ் எஸ் நந்தகுமார் மற்றும் உரிமையாளர் மனோஜ் உட்பட பலர் கலந்து கொண்டனர்



ஈரோடு மாவட்ட ஏஐடியுசி அலுவலகத்தில் (ஏப்.26) அன்று துணைத்தலைவர் டி.ஏ.செல்வம் தலைமையில் மாவட்ட குழுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் ஈரோடு பேரணி பொதுக்கூட்டத்தில் பங்கேற்பது, கொடியேற்று விழா பேரணிக்கு மாவட்ட ஆட்சியர் அனுமதி கடிதம் வழங்குவது மற்றும் பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.



கன்னியாகுமரி பகவதி அம்மன் கோவில் பக்தர்கள் சங்கத்தின் நிர்வாகிகள் கலப்பை மக்கள் இயக்க நிறுவன தலைவர் பி.டி. செல்வகுமாரை மரியாதை நிமித்தமாக சந்தித்து பேசினார்கள்

# கோடைகாலங்களில் வனஉயிரினங்கள் நீர் தேவையினை போக்கிடும் ஈரோடு மாவட்ட வனத்துறையின் நடவடிக்கைகள்



நாட்டின் வனங்கள் மற்றும் வனஉயிரினங்கள் விலைமதிப்பற்ற இயற்கையின் சொத்துக்களாகும். அவை வருங்கால சந்ததியினருக்காக பாதுகாப்படுவதை உறுதி செய்வதற்காக கவனமாக மேலாண்மை மற்றும் பாதுகாப்பு முயற்சிகளை தமிழ்நாடு வனத்துறை மேற்கொண்டு வருகிறது. ஈரோடு மாவட்டத்தை பொறுத்த வரையில் சத்தியமங்கலம் புலிகள் காப்பகம், தந்தை பெரியார் வனஉயிரின சரணாலயம், வெள்ளோடு பறவைகள் சரணாலயம் மற்றும் காப்புக்காடுகள் என பன்முகதன்மையினை கொண்ட மாவட்டமாகவும் மாநிலத்தின் பல்லுயிர் பெருக்க பாதுகாப்பில் முக்கிய பங்காற்றும் வனப்பரப்பினையும் கொண்ட நிலப்பரப்பாக திகழ்ந்து வருகிறது.

ஈரோடு மாவட்டத்தில் தற்போது கோடை காலம் தொடங்கி வனத்திற்குள் வனஉயிரினங்களுக்கான போதிய நீரின்றி வறட்சி நிலவி வருவதை கருத்தில் கொண்டு, ஈரோடு மாவட்ட வனத்துறையின் மூலமாக வனத்திற்குள் வனஉயிரினங்களின் நீர் தேவையினை போக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது.

ஈரோடு மாவட்டத்திலுள்ள வனப்பகுதிகளில் வனஉயிரினங்களின் வறட்சிகாலங்களில் நீர் தேவையை பூர்த்தி செய்யும் நோக்கில், கசிவு நீர் குட்டைகள் மற்றும் சிறிய, நடுத்தர அளவிலான தடுப்பணைகள் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும், முக்கிய வனப்பகுதிகளில் குடிநீர் தொட்டிகள் நிறுவ ப்பட்டு, அவற்றில் சூரிய ஒளியில் இயங்கும் மின்மோட்டார் வசதி மூலம் நீர் நிரப்பப்படுவதுடன். கடுமையான வறட்சி நிலவுகின்ற பகுதிகளில் வாகனங்கள் மூலம் நீர் கொண்டு சென்று நிரப்பும் பணியும் மேற்கொள்ளப்படுகிறது. இதனுடன்,

இயற்கை நீர்நிலைகள் ஆழப்படுத்தப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றன. வனஉயிரினங்களின் உணவுத் தேவையை மேம்படுத்தும் வகையில் அந்நிய களைச்செடிகள் அகற்றும் பணிகளும் தீவிரமாக செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இதன் காரணமாக வனஉயிரினங்கள் உணவு மற்றும் குடிநீர் தேவைக்காக வனத்தை விட்டு வெளியேறும் சூழல்கள் பெருமளவு குறைக்கப்படு கிறது. மேலும் சரகம் வாரியாக சிறப்பு குழுக்கள் அமைக்கப்பட்டு ரோந்து பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. அதிநவீன தொழில்நுட்பகளை பயன்படுத்தி இரவில் வனஉயிரினங்களின் நடமாட்டாங்கள் கண்காணிக்கப்பட்டு, அவை வனத்தைவிட்டு வெளியேறாமல் இருக்கு உரிய பாதுகாப்பு மற்றும் கண்காணிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பல்லுயிர் பாதுகாப்பை உறுதி செய்யும் அதே வேளையில், மனிதர்களும் வனஉயிரினங்களுக்கும் இடையிலான முரண்களை குறைக்கவும் இந்த முயற்சிகள் உள்ளன என ஈரோடு வன அலுவலர் கு.வெ.அப்பால நாயுடு தெரிவித்துள்ளார்.

# கோவை ஆர் எஸ் புரம் பகுதியில் உள்ள கிக்கானி பள்ளி வளாகத்தில் இதயங்கள் அறக்கட்டளையின் 9வது ஆண்டு விழா

## வாழ்க்கையை போராடி வென்ற குழந்தைகளுக்கு விருதுகள் வழங்கபட்டது




டைப் 1 சர்க்கரை நோயை கட்டுக்குள் கொண்டு வர தொடர்ந்து களப்பணியாற்றி வரும் இதயங்கள் அறக்கட்டளையின் 9வது ஆண்டு விழா, கோவை, ஆர்.எஸ். புரம் பகுதியில் உள்ள கிக்கானி பள்ளியில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில், அறக்கட்டளையின் நிறுவனர் டாக்டர் கிருஷ்ணன் சுவாமிநாதன் கலந்து கொண்டு அனைவரது மத்தியிலும் கூறியதாவது.. கடந்த ஒன்பது ஆண்டுகளாக மேற்கொள்ளப்பட்ட மருத்துவ சேவைகள், அரசுடன் இணைந்து செயல்படுத்தப்படும் திட்டங்கள் மற்றும் எதிர்காலத்தில் அறிமுகப்படுத்தப்பட உள்ள புதியமருத்துவதொழில்நுட்பங்கள் குறித்து விரிவாக எடுத்துரைத்தார்.. மேலும்,

டைப் 1 சர்க்கரை நோயால் உயிரிழப்பு அபாயத்தில் இருந்த குழந்தைகள் கூட, சரியான மற்றும் நேர்மையான சிகிச்சையால் இன்று பள்ளி மற்றும் கல்லூரி கல்வியை தொடர்ந்து வருகின்றனர். சிலர் தன்னம்பிக்கையுடன் வேலை செய்து வருமானமும் ஈட்ட ஆரம்பித்துள்ளனர். கடந்த 9 ஆண்டுகளில் இந்தியா முழுவதும் முதல் வகை சர்க்கரை நோயால் பாதிக்கப்பட்ட 4000-க்கும் அதிகமான குழந்தைகளை பராமரித்து வருகின்றதாகவும், உயர்தர இன்சுலின் , சர்க்கரைபார்க்கும்சாதனம், குளுக்கோஸ் ஸ்ட்ரிப்ஸ் மற்றும் இன்சுலின் பம்ப் போன்ற அதிநவீன மருத்துவம் அனைத்து ஏழை குழந்தைகளுக்கும் வழங்கி வருகின்றதாக தெரிவித்தார்.


மேலும், இந்த நோயை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து சிகிச்சை அளிக்கும் நோக்கில், தமிழகத்தில் 38 மாவட்டங்களில்எங்கள் சேவை தொடர்கிறதாகவும், தற்போது 10 மாவட்டங்களில் சர்க்கரை நோய் சிகிச்சை மையங்களை செயல்படுத்தி வருகின்றதாகவும் கூறினார். வரும் ஆண்டில் மதுரை, சேலம், கரூர் உள்ளிட்ட 8மாவட்டங்களுக்கு இந்த சேவையை விரிவுபடுத்த திட்டமிட்டுள்ளதாகவும், இந்த மையங்களில் உள்ள உயர்தரமருத்துவ கருவிகளின் உதவியால், ஒரு சொட்டு ரத்தத்திலேயே கிட்னி, தைராய்டு, ரத்தசோகை உள்ளிட்ட பல்வேறு பரிசோதனை முடிவுகளை விரைவாக அறிய முடிகிறது, என் கூறினார் தொடர்ந்து டைப் 1 சர்க்கரை நோயுடன் வாழ்ந்து வெற்றிகரமாக முன்னேறி வரும் குழந்தைகள்,புற்றுநோய் உள்ளிட்ட பல்வேறு பாதிப்புகளில் இருந்து மீண்ட குழந்தைகள், அவர்களின் பெற்றோர் மற்றும் தன்னார்வலர்கள் ஆகியோருக்கு பாராட்டு மற்றும் விருதுகள் வழங்கப்பட்டது.

# நந்தா பாலிடெக்னிக் கல்லூரி மாநில அளவிலான கைப்பந்துப் போட்டியில் சாதனை



பாலிடெக்னிக் இடையேயான தடகள சங்கத்தின்(IIPA)சார்பாகமாநில அளவில் மண்டலங்களுக்கிடையேயான பாலிடெக்னிக் கல்லூரி ஆண்களுக்கான கைப்பந்துப் போட்டியானது ஆர்.வி.எஸ் பாலிடெக்னிக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் அண்மையில் நடைபெற்றது. இதில் உள் சுற்றுகளின் அடிப்படையில் மண்டல அளவில் தேர்ந்தொடுக்கப்பட்ட 11 பாலிடெக்னிக் கல்லூரி அணிகள் கலந்து கொண்டன. முதலில் பல்வேறு சுற்றுகளில் 11 அணிகள் ஒவ்வொன்றும் மோதிக்கொண்டன. இவ்வாறு பல்வேறு சுற்றுகளை கடந்து சேலம் மண்டலத்தின் சார்பில் தியாகராஜர், ஈரோடு மண்டலத்தின் சார்பில் நந்தா, நாகை மண்டலத்தின் சார்பில் ஸ்ரீமகாலெட்சுமி மற்றும் வேலூர் மண்டலத்தின் ஸ்ரீவெங்டேஸ்வரா பாலிடெக்னிக் கல்லூரிகள் அரையிறுதி போட்டிகளுக்கு தகுதிப் பெற்றன. இதில் தியாகராஜர் மற்றும் ஸ்ரீவெங்டேஸ்வரா பாலிடெக்னிக் கல்லூரிகள் வெளியேற்றப்பட்டு நந்தா மற்றும் ஸ்ரீமகாலெட்சுமி பாலிடெக்னிக் கல்லூரிகள் இறுதிப்போட்டிக்கு தகுதி பெற்றார்கள்.

இறுதி போட்டியின் முடிவில், நாகை மண்டலத்தின ஸ்ரீமகாலெட்சுமி பாலிடெக்னிக் கல்லூரியினை வீழ்த்தி ஈரோடு மண்டல நந்தா பாலிடெக்னிக் கல்லூரி வெற்றிப் பெற்று சாதனை படைத்தது. இச்சாதனை படைத்த மாணவர்களையும்,உடற்கல்வி இயக்குநர் எம். மணிகண்டன் , ஸ்ரீ நந்தா கல்வி அறக்கட்டளையின் தலைவர் வி. சண்முகன், அங்கதத்தினர் பானுமதி சண்முகன், இணை நிர்வாக அறங்காவலர்களான எஸ். நந்தகுமார் பிரதீப், எஸ். திருமூர்த்தி, முதல்வர் ஜி. மோகன்குமார் மற்றும் நந்தா தொழில்நுட்ப வளாகத்தின் நிர்வாக அலுவலர் ஏ.கே. வேலுசாமி ஆகியோர் தங்களது பாராட்டினை தெரிவித்தார்கள்.




# அச்சிறுப்பாக்கம் அருள்மிகு ஆட்சீஸ்வரர் திருக்கோயில் சித்திரை திருவிழா தேரோட்டம்

செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட அச்சிறுப்பாக்கத்தில் அமைந்துள்ள அருள்மிகு ஆட்சீஸ்வரர் திருக்கோயிலின் எதிரே நிறுத்தப்பட்டிருந்த 36 அடி உயரம் உள்ள பெரிய தேர் மற்றும் 27 அடி உயரம் உள்ள சிறிய தேர் கோயில் தலைமை சிவாச்சாரியார் சங்கர் தலைமையிலான வேத விற்பனர்கள் வேத மந்திரங்கள் முழங்க மேள தாளங்கள் ஒலிக்க ஆட்சீஸ்வர் இளங்கிளி அம்மன் ஆகிய இரு தேர்களை பக்தர்கள் வடம் பிடித்து இழுத்தனர். விழாவில் கலந்து கொண்ட பக்தர்களுக்கு பிரசாதம் அன்னதானம் வழங்கப்பட்டது விழாவிற்கான ஏற்பாடுகளை விழா குழுவினர் செய்திருந்தனர். மேலும் பாதுகாப்பு பணியில் 500க்கும் மேற்பட்ட போலீசார் சுகாதாரத்துறை அதிகாரிகள் பங்கு பெற்றனர்.

## வனத் தீ தடுப்பு மற்றும் மேலாண்மை சார்பில்

# ஈரோடு வனக்கோட்டத்தில் வனத் தீ தடுப்பு மற்றும் மேலாண்மைக்காக பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள்





காட்டுத் தீ என்பது பேரழிவினை ஏற்படுத்தும் சூழல்சார் பிரச்சனையாகும். பொதுவாக கோடை காலங்களில் போதுமான மழை இன்றி வெப்பம் அதிகமாகும்போது காடுகளில் தீ ஏற்படுகிறது. காட்டுத்தீ ஏற்பட அதிகரித்து வரும் வெப்ப நிலை, வறட்சி, மரங்களின் உராய்வு தன்மை, இடி மின்னல் தாக்கம் ஆகியவைகள் காரணமாக இருந்தாலும், புகைப்பிடி ப்பவர்கள் தூக்கியெறியும் நெருப்புகளாலும், வனத்தையொட்டியுள்ள விவசாய நிலங்களில் நெருப்பு வைப்பதாலும், சிறுவன மகசூல் மற்றும் மேய்ச்சல் புல் தீவனத்திற்காகவும், தேன் எடுத்தல் மற்றும வனஉயிரினங்களை விரட்டுவதற்காகவும் நெருப்புகள் பயன்படுத்தப்படுத்துதல் போன்ற மனித செயல்பாடுகளினாலேயே காட்டிற்குள் அதிகமாக தீ நிகழ்வுகள் ஏற்படுகிறது. இத்தீயினால் காடுகள் பாதிப்படையும்போது வனவளமும், மண்வளமும் அழிந்து வன உயிரினங்களின் வாழ்விடங்கள் அழிக்கப்பட்டு, குடிநீர் தேவைக்காவும் வனஉயிரினங்கள் வனத்தைவிட்டு வெளியேறி மனித குடியிருப்புகளுக்குள் நுழைந்து மனித வனஉயிரின முரண்கள் ஏற்படுகிறது. வனத்திற்குள் செல்வதும், வனத்தீ ஏற்படுத்துவதும், அதற்கு உடந்தையாய் இருப்பதும் தமிழ்நாடு வனச்சட்டம் 1882, வனஉயிரினம் (பாதுகாப்பு) சட்டம், 1972-யின்படி தண்டைக்குரிய குற்றச்செயல் என்பதுடன், குண்டாஸ் சட்டத்தின்கீழ் கைது செய்யவும் நடவடிக்கை எடுக்கப்படும். 2025-2026 நிதியா ண்டில் ஈரோடு வனக்கோட்டத்தில் வனத் தீ தடுப்பு மற்றும் மேலாண்மைக்காக பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் ஒருங்கிணைந்த முறையில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. குறிப்பாக, காட்டுத் தீ பரவலைக் குறைக்கும் நோக்கில் 372.5 எக்டர் பரப்பளவில் அந்நிய களைச்செடிகள் அகற்றுதல், 235 கிலோமீட்டர் தொலைவிற்கு தீத்தடுப்பு கோடுகள் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பொதுமக்கள் மற்றும்மாணவர்களிடையே விழிப்பு ணர்வை ஏற்படுத்தும் வகையில், பிப்ரவரி 2026 மாதத்தில் அந்தியூர், பர்கூர். தட்டக்கரை, சென்னம்பட்டி மற்றும் ஈரோடு வனச்சரகங்களில் தீத்தடுப்பு விழிப்புணர்வு வாரம் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. தீயணைப்பு துறையினருடன் இணைந்து நடத்தப்பட்டு, காட்டுத்தீ தடுப்பு நடவடிக்கைகள் குறித்து விரிவான விளக்கங்கள் வழங்கப்பட்டன. மேலும், கோடைக்காலங்களில் வன உயிரினங்கள் நீர்த்தேவைக்காக வனப்பகுதிகளை விட்டு வெளியே வராமல் தடுக்க, சூரிய ஒளியால் இயக்கப்படும் மோட்டார் அமைப்புகள் மூலம் வனத்திற்குள் உள்ள நீர்த்தொட்டிகளுக்கு தண்ணீர் வழங்கப்பட்டு வருகிறது. இதனுடன், வனப்பகுதிகளில் உள்ள குட்டைகள் மற்றும் பிற நீர்நிலைகள் தூர்வாரப்பட்டு பராமரிக்கப்பட்டு, வன உயிரினங்களுக்கு தேவையான நீர் ஆதாரங்கள் உறுதிசெய்யப்பட்டுள்ளன. வனத்திற்குள் காட்டுத்தீயினை உடனடியாக கண்டறிந்து அறிவிப்பு செய்யும் தொழில் நுட்பங்களை பயன்படுத்துதல், தீ கண்காணிப்பு கோபுரங்கள் அமைத்தல், களப்பணியாளர்கள் மற்றும் உள்ளூர் மக்களுக்கு தீத்தடுப்பு நெறிமுறைகளில் பயிற்சி அளித்தல், தீ பாதுகாப்பு நடவடிக்கைகள் மற்றும் காட்டுத்தீயைத் தடுப்பதன் முக்கியத்துவம் குறித்து விழிப்புணர்வு பிரச்சாரங்கள், பட்டறைகள் மற்றும் பயிற்சிகள் நடத்தப்பட்டுள்ளன. மேலும், ஈரோடு மாவட்டத்தில் வனத்தீயினை கண்காணித்து நடவடிக்கை எடுக்கும் பொருட்டு "வனத் தீ கட்டுப்பாட்டு அறை" அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. இம்மையம் ஈரோடு மாவட்டத்திலுள்ள, காப்புக்காடு மற்றும் காப்பு நிலங்களில் ஏற்படும் தீ நிகழ்வுகள், வனக்குற்றங்கள், பயிர்சேதம், மனித - வனஉயிரின முரண் களைதல், வனஉயிரின இறப்பு மற்றும் மீட்பு ஆகியவை குறித்து பொது மக்களால் தெரிவிக்கப்படும் புகார் / மனுக்களின் மீது உடனுக்குடன் நடவடிக்கை எடுத்திடும் நோக்கில் செயல்பட்டு வருகிறது.

கோடைகாலம் நெருங்கி வருவதால் வனத்திற்குள் ஏற்படும்தீ தொடர்பான தகவல்களை பொதுமக்கள் தங்களது தகவல்கள் / புகார் / கருத்துக்கள் ஆகியவற்றை 1800-425-1107 என்கிற கட்டணமில்லா எண்ணிற்கு தொடர்பு கொண்டு தெரிவிக்கலாம் எனத்தெரிவிக்கப்படுகிறது.

# இரு தொகுதிகளில் போட்டி: தேர்தல் செலவை வேட்பாளர் ஏற்க உத்தரவிடக் கோரிய வழக்கு தள்ளுபடி



சென்னை: தேர்தல்களில் இரு தொகுதிகளில் போட்டியிடும் வேட்பாளர்களிடம், ஒரு தொகுதி பதவியை ராஜினாமா செய்யும் போது, தேர்தல் செலவை திருப்பி செலுத்துவதாக உத்தரவாத பத்திரம் பெற வேண்டும் என தேர்தல் ஆணையத்துக்கு உத்தரவிடக் கோரிய வழக்கை சென்னை உயர் நீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளது.

மதுரை மேலூரை சேர்ந்த மணி என்பவர் தாக்கல் செய்த மனுவில்,சட்டமன்றம்,மக்களவை தேர்தல்களில் சில வேட்பாளர்கள் இரண்டு தொகுதிகளில் போட்டியிடுகின்றனர். இரு தொகுதிகளிலும் வெற்றி பெறும் பட்சத்தில், ஒரு தொகுதி பதவியை ராஜினாமா செய்ய வேண்டும். அந்த தொகுதிக்கு இடைத்தேர்தல் நடத்த வேண்டியுள்ளது. அதனால் அரசுக்கு செலவு ஏற்படுகிறது எனக் குறிப்பிட்டுள்ளார்.

அதனால், இரு தொகுதிகளில் போட்டியிடும் வேட்பாளர்களிடம், ராஜினாமா செய்யும் தொகுதியின் தேர்தல் செலவுகளை ஏற்க வேண்டும் என உத்தரவாத பத்திரம் பெற வேண்டும் என தேர்தல் ஆணையத்துக்கு உத்தரவிட வேண்டும் என கூறப்பட்டுள்ளது.

இந்த மனு, தலைமை நீதிபதி எஸ்.ஏ.தர்மாதிகாரி மற்றும் நீதிபதி ஜி. அருள் முருகன் அமர்வில் விசாரணைக்கு வந்தபோது, வேட்பாளர்கள் இரு தொகுதிகளில் போட்டியிட சட்டம் அனுமதியளிக்கிறது. இந்த சட்டப்பிரிவை எதிர்த்த வழக்கை உச்ச நீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளதைச் சுட்டிக்காட்டி, வழக்கை தள்ளுபடி செய்து உத்தரவிட்டது.

## ஈரோடு கலெக்டர் ச.கந்தசாமி

# தேர்தல் நடத்தும் அலுவலர்கள் முன்னிலையில் இந்திய தேர்தல் ஆணையத்தின் இணையதளத்தின் மூலம் கணினி சுழற்சி முறையினை துவக்கி வைத்தார்



தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் -2026 மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி தலைமையில் 04.05.2026 அன்று நடைபெறவுள்ள வாக்கு எண்ணிக்கையில் வாக்கு எண்ணும் மையத்தில் பணிமேற்கொள்ளும் நுண்பார்வையாளர்கள், மேற்பார்வையாளர்கள் மற்றும் உதவியாளர்களுக்கான பணி ஒதுக்கீட்டினை தேர்தல் நடத்தும் அலுவலர்கள் முன்னிலையில் இந்திய தேர்தல் ஆணையத்தின் இணையதளத்தின் மூலம் கணினி சுழற்சி முறையினை (Randomization) துவக்கி வைத்தார்.

ஈரோடு மாவட்ட ஆட்சியரக அலுவலகத்தில் நேற்று (28.04.2026) தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல்-2026 மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட ஆட்சியர் 04.05.2026 அன்று வாக்கு எண்ணும் மையத்தில் ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நடைபெறவுள்ள வாக்கு எண்ணிக்கையில் பணிமேற்கொள்ளும் நுண்பார்வையாளர்கள், மேற்பார்வையாளர்கள். மற்றும் உதவியாளர்களுக்கான பணி ஒதுக்கீட்டினை தேர்தல் நடத்தும் அலுவலர்கள் முன்னிலையில் இந்திய தேர்தல் ஆணையத்தின் இணையதளத்தின் மூலம் கணினி சுழற்சி முறையினை (Randomization) துவக்கி வைத்தார்.

ஈரோடு மாவட்டத்தில் உள்ள 8 சட்டமன்ற தொகுதிகளுக்கான வாக்கு எண்ணிக்கை வருகின்ற 04.05.2026 அன்று காலை 7 மணிக்கு சித்தோடு அரசினர் பொறியியல் கல்லூரி மற்றும் கோபிசெட்டிபாளையம் கோபி கலை மற்றும் அறிவியல் கல்லூரி ஆகிய 2 வாக்கு எண்ணும் மையங்களில் நடைபெறவுள்ளது. அதனைத்தொடர்ந்து வாக்கு எண்ணும் நாளான 04.05.2026 அன்று வாக்கு எண்ணும் மையத்தில் வாக்கு எண்ணும் பணியினை மேற்கொள்ளும் மேற்பார்வையாளர்கள், உதவியாளர்கள் மற்றும் நுண்பார்வையாளர்களுக்கான பணி ஒதுக்கீடு இந்திய தேர்தல் ஆணையத்தின் இணையதளத்தின் மூலம் கணினி சுழற்சி முறையில் துவக்கி வைக்கப்பட்டு உள்ளது. இதில் ஒரு சட்டமன்ற தொகுதிக்க தலா 17 மேற்பார்வையாளர்கள். தலா 17 உதவியாளர்கள், தலா 17 நுண்பார்வையாளர்கள் என மொத்தம் 408 அலுவலர்கள் வாக்கு எண்ணும் பணியில் ஈடுபடவுள்ளனர்.

ஈரோடு மாவட்டம் 8 சட்டமன்ற தொகுதிகளில் உள்ள 2739 வாக்குச்சாவடி மையங்களில் தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தலில் வாக்குப்பதிவு செய்யப்பட்ட வாக்குப்பதிவு இயந்திரங்களின் வாக்கு எண்ணிக்கை தலா 14 மேசைகள் என 8 சட்டமன்ற தொகுதிகளுக்கும் 112 மேஜைகளில் நடைபெறும்.

மேலும், ஈரோடு மாவட்டத்தில் உள்ள 8 சட்டமன்ற தொகுதிக்களுக்கு 56 மேற்பார்வையாளர்கள். 112 உதவியாளர்கள். 56 நுண்பார்வையாளர்கள் தபால் வாக்குக்களை எண்ணும்பணியில் ஈடுபடவுள்ளார்கள். தபால் வாக்கு எண்ணும் பணியானது 48 மேஜைகளில் நடைபெறவுள்ளது. இப்பணியில் ஈடுபடவுள்ளவர்களுக்கு கணினி சுழற்சி முறையில் பணி ஒதுக்கீடுசெய்யப்பட்டது.

இந்நிகழ்வில், மாவட்ட வருவாய் அலுவலர் சு.சாந்த குமார், தேர்தல் நடத்தும் அலுவலர்கள் அர்பித் ஜெயின்(ஈரோடு கிழக்கு). சிவானந்தம் (கோபிசெட்டிபாளையம்) சிந்துஜா (ஈரோடு மேற்கு) கணினி நிரலாளர் வெங்கடேஷ் உட்பட தொடர்புடைய துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# விருத்தாச்சலம் விருத்தகிரீஸ்வரர் திருக்கோவிலில் ஆறாவது மாதமாக மாபெரும் அன்னதானம்



கடலூர் மாவட்டம் விருத்தாச்சலத்தில் அமைந்துள்ள புகழ்பெற்ற அருள்மிகு பழமலைநாதர் கோவிலில், பாஜக மாவட்ட ஓபிசி அணி பொதுச் செயலாளரும் ஓம் சக்தி ரியல் எஸ்டேட், நெல் அறுவடை இயந்திரம் மற்றும் எர்த் மூவர்ஸ் ஆகிய நிறுவனங்களின் நிறுவனரான எ.கொளப்பாக்கம் இளையராஜா தலைமையில் நேற்று ஏப்ரல் 28 செவ்வாய்க்கிழமை 200க்கும் மேற்பட்டோருக்கு மாபெரும் அன்னதானம் வழங்கப்பட்டது. வாரம் சனி மற்றும் செவ்வாய் கிழமைகளில் 200க்கும் மேற்பட்டோருக்கு ஐந்து மாதங்கள் கடந்து ஆறாவது மாதமாக வெற்றிகரமாக மாபெரும் அன்னதானம் வழங்கி வருகின்றனர். வெளியூர்களில் இருந்து வரும் பக்தர்களுக்குப் பெரும் உதவியாக அமைந்துள்ள இத்தகைய அறப்பணியைத் தொடர்ந்து முன்னெடுத்து வரும் ஒருங்கிணைப்பாளர் கொளப்பாக்கம் இளையராஜா மற்றும் அவரது குழுவினரைப் பொதுமக்கள் நெஞ்சாரப் பாராட்டிச் செல்கின்றனர்.

# கிருஷ்ணகிரி மாவட்டம் மத்தூர் ஒன்றியம் நாகம்பட்டி சுங்கசாவடி அருகில் இருசக்கர வாகனத்தில் சென்ற நபர் மீது கார் மோதி பலி

கிருஷ்ணகிரி மாவட்டம் மத்தூர் ஒன்றியம் நாகம்பட்டி சுங்க சாவடியில் இன்று மதியம் 2 மணி அளவில் முன்னாள் சென்ற இருசக்கர வாகனத்தின் மீது கார் மோதி விபத்தில் பலியானார் விபத்து ஏற்படுத்திய வாகனத்தின் TN24.AM2345 என்ற எண் கொண்ட கார் இருசக்கர வாகனத்தின் மீது மோதி விபத்து நடந்ததையும் அறியாமல் ஓட்டுநர் சுங்க சாவடியில் உள்ளே சென்றபோது பணியாளர்கள் தடுத்து நிறுத்தினார்கள் இதைப்பற்றி தகவல் அறிந்த மத்தூர்


காவல்துறையினர் உடனடியாக சம்பவ இடத்திற்கு சென்று ஆய்வு மேற்கொண்டு விசாரணை நடத்தி வருகின்றனர் பயணிகளை ஏற்றுக்கொண்டு செல்லும் பேருந்துகளில் இருசக்கர வாகனங்கள் மோதினாலும் பேருந்துகள் மீது வழக்கு பதிவு செய்யும் காவல்துறையினர் இதற்கு துணை போகும் வட்டார போக்குவரத்து அலுவலர் பொதுமக்களுக்கு என்ன பதில் சொல்லப் போகிறார் பொதுமக்கள் எதிர்பார்ப்பு.









மதுரை மீனாட்சிதிருக்கல்யாணத்தை முன்னிட்டு மதுரையின் அட்சய பாத்திரம் ட்ரஸ்ட் மூலம் பக்தர்களுக்கு திருப்பரங்குன்றம் அருள்மிகு சுப்ரமணிய சுவாமி திருக்கோவில் அறங்காவலர் வ. சண்முகசுந்தரம் அன்னதானம் வழங்கிய போது எடுத்த படம். அருகில் ஓய்வு பெற்ற காவல் கண்காணிப்பாளர் முனைவர் மணிவண்ணன், மதுரையின் அட்சய பாத்திரம் ட்ரஸ்ட் நிறுவனர் நெல்லை பாலு, என். கோபாலகிருஷ்ணன் ஆகியோர் உள்ளனர்



ஈரோடுமாவட்டம்சத்தியமங்கலம்காவல்நிலையம்பின்புறம்உள்ளவரசித்திவிநாயகர் கோயிலில், நேற்று சிறப்பு பூஜை மற்றும் வழிபாடுகள் நடைபெற்றன. விநாயக பெருமானுக்கு பால், பன்னீர், தேன், இளநீர் மற்றும் கரும்புச்சாறு உள்ளிட்ட அஷ்ட திரவியங்களால் அபிஷேகம் செய்யப்பட்டு, வண்ண மலர்களால் சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டது. தொடர்ந்து சகஸ்ரநாம அர்ச்சனை மற்றும் மஹா தீபாராதனை நடைபெற்றது. இந்த நிகழ்வில் திரளான பக்தர்கள் பங்கேற்று தரிசனம் செய்தனர்.



ஈரோடு மாவட்டம் தாளவாடி மலைப்பகுதியில் உள்ள 27 கொண்டை ஊசி வளைவுகளில், 17வது வளைவு அருகே நேற்று முன்தினம் இரவு சிறுத்தை ஒன்று சாலையில் நடந்து சென்றது. இதனைக் கண்ட வாகன ஓட்டிகள் தங்கள் வாகனங்களை நிறுத்தி, அதனைப் பலரும் செல்போனில் படம் பிடித்தனர். வனத்துறையினர், இரவு நேரங்களில் வாகன ஓட்டிகள் மிகுந்த கவனத்துடன் செல்ல வேண்டும் என்றும், இரு சக்கர வாகனங்களில் செல்வோர் இரவு பயணத்தைத் தவிர்க்க வேண்டும் என்றும் எச்சரித்துள்ளனர்.



கூடங்குளம் அணுமின் நிலையத்தின் 3வது அணு உலையின் சோதனை ஓட்டம் 27 ஏப்ரல் 2026 அன்று அதிகாரப்பூர்வமாகத் தொடங்கியது. அணு உலைக்குள் நீர் பாய்ச்சும் பணி (Hot Run) வெற்றிகரமாக ஆரம்பிக்கப்பட்டு, முக்கிய பாகங்களின் செயல்பாடு மற்றும் பாதுகாப்பு அம்சங்கள் சோதிக்கப்பட்டு வருகின்றன. இது 1000 மெகாவாட் திறன் கொண்ட தற்சார்பு அணு உலை பிரிவாகும்.

# மதுரை மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கல்யாணம் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் முன்னிலையில் வெகுவிமர்சையாக நடைபெற்றது

## அம்மனுக்கு வைரத்தால் ஆன மங்கலநாண் அணிவிக்கப்பட்டு திருக்கல்யாணம் கோலாகலமாக நடைபெற்றது



மீனாட்சியம்மன் திருக்கல்யாணத்தால் விழாக்கோலம் பூண்ட மதுரை மாநகரம்

தங்கத்தால் ஆன பல நூற்றாண்டுகள் பழமை வாய்ந்த சந்தன கும்பா மற்றும் பன்னீர் தெளிப்பு கும்பா மூலமாக சுவாமிக்கும் அம்மனுக்கு பன்னீர் தெளிக்கப்பட்டது மீனாட்சியம்மன் திருக்கல்யாணத்தை தொடர்ந்து சுமங்கலி பெண்கள் புதிய தாலி கயிறை அணிந்து கொண்டனர்

உலக பிரசித்தி பெற்ற மதுரை மீனாட்சி அம்மன் கோவிலில் 12 மாதங்களும் திருவிழா நடைபெறும். அதிலும் சித்திரை மாதம் நடைபெறும் திருவிழா பிரசித்தி பெற்ற திருவிழாவாக நடைபெறும், இந்தாண்டு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோவிலின் சித்திரை திருவிழா கடந்த ஏப்ரல் 19 ஆம் தேதி கொடியேற்றத்துடன் தொடங்கியது. ஒவ்வொரு நாளும் அம்மனும், சுவாமியும் வெவ்வேறு வாகனங்களில் எழுந்தருளி நான்கு மாசி வீதிகளிலும் வலம் வந்து பக்தர்களுக்கு அருள் பாலித்து வருகின்றனர்.

விழாவின் முக்கிய நிகழ்ச்சிகளான 8 ஆம் நாளில் மீனாட்சி அம்மன் பட்டாபிஷேகம், 9 ஆம் நாள் நிகழ்வாக திக் விஜயமும் நடைபெற்று முடிவடைந்தது,

இதனை முன்னிட்டு கோவில் வடக்கு ஆடி, மேல ஆடி சந்திப்பில் நறுமணம் மிக்கவெட்டிவேர்கள் மற்றும் பல வகை வண்ணப்பூக்களால் அலங்கரிக்கப்பட்டு திருக்கல்யாண மேடை அமைக்கப்பட்டுள்ளன.மேலும்அலங்கார வளைவுகளில் பச்சரியால் அலங்கரிப்பட்டுள்ளது. சித்திரை திருவிழாவின் 10 ஆம் நாள் விழாவின் சிகர நிகழ்ச்சியான மீனாட்சி - சுந்தரேசுவரர் திருக்கல்யாணத்தை முன்னிட்டு சுவாமியும், அம்மனும்இன்றுஅதிகாலை அழகிரிசாமி நாயுடு, சூறாவளி சுப்பையா', கல்யாண சுந்தர முதலியார் மண்டகப்படிகளில் எழுந்தருளிய பின்னர் நான்கு சித்திரை வீதிகள் சுற்றி வலம் வந்தனர்.

அப்போது திருக்கல்யாண மேடையில் ஓதுவார்களால் பன்னிரு திருமுறைகள் ஓதப்பட்டது. இதையடுத்து முத்துராமய்யர் மண்டபத்தில் சுவாமியும், அம்மனும் கன்னி ஊஞ்சலாடிய பின் கோவில் வடக்கு ஆடி, மேல ஆடி சந்திப்பில் நறுமணம் மிக்க வெட்டிவேர்கள் மற்றும் பல வகை வண்ணப்பூக்களாலும், பச்சரியாலும், நவதானியங்களாலும் அலங்கரிப்பட்ட திருக்கல்யாண மேடையில் மணக்கோலத்தில் மீனாட்சிய ம்மனும், சுந்தரேசுவரர் பிரியாவிடை யுடனும் தனி தனியாக எழுந்தருளினர். முன்னதாக திருக்கல்யாண மேடையில் சுப்பிரமணி யசுவாமி தெய்வானையுடனும் பின்னர் மீனாட்சியம்மனும் சுந்தேரசுவரரரும் மேடைக்கு வந்த பின்னர் பவளகனிவாய் பெருமாளும் மணமேடையில் எழுந்தருளினர்.

இதனையடுத்து சுவாமி மற்றும் அம்மனின் சார்பில் பிரதிநிதிகளான சிவாச்சாரியார்களுக்கு ரக்சாபந்தன் எனப்படும் காப்பு கட்டிய பின்னர் மீனாட்சியம்மனுக்கும், சுந்தரேசுவரருக்கும் காப்பு கட்டும் வைபவமும் அதனை தொடர்ந்து பல்வேறு பூஜைகளும் நடைபெற்றது. தொடர்ச்சியாக மீனாட்சியம்மனுக்கும், சுந்தரேஸ்வரருக்கும் மணப்பட்டு சாற்றும் நிகழ்வு நடைபெற்றதையடுத்து கோவில் சார்பில் சுந்தரேஸ்வரருக்கு பட்டு பீதாம்பரமும், அம்மனுக்கு பட்டுச்சேலைகளும் சாத்தப்பட்டது.

தனது தங்கையான மீனாட்சியம்மனை பவளகனிவாய் பெருமாள் தாரை வார்த்து கொடுக்கும் நிகழ்வும் நடைபெற்றது, தொடர்ந்து மீனாட்சியம்மன் சார்பிலும், சுந்தரேசுவரர் சார்பிலும் பிரதிநிதிகளாக இருந்து சிவாச்சாரியார்கள் மாலை மாற்றும் வைபவம் நடைபெற்றது.

இதனை தொடர்ந்து வேத மந்திரங்கள் முழங்க, ஹோமம் வளர்க்கப்பட்டு மங்கல வாத்தியங்கள் முழங்க ரிஷப லக்கனத்தில் மீனாட்சியம்மனுக்கு வைரத்தால மங்கல நாண் அணிவிக்கப்பட்டு திருக்கல்யாணம் கோலகலமாக நடைபெற்றது.

கோவிலில் கூடியுள்ள பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் பக்தி கோஷம் முழங்க மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கல்யாணம் நடைபெற்றவுடன் பெண்கள் தங்களது மங்கல கயிற்றை புதுப்பித்து கொண்டனர்.

மீனாட்சி சுந்தரே சுவரர் திருக்கல்யா ண நிகழ்வை தொடர்ந்து சுவாமிக்கும், அம்மனுக்கும்பல்வேறுதீபாராதனைகள் காண்பிக்கப்பட்டது. திருக்கல்யாணத்தின் போது மட்டுமே அம்மன் உற்சவத்திற்கு தங்க அங்கி அணிவிக்கப்படும், அப்போது 1823 ஆம் ஆண்டு முன்னோர்களால் மீனாட்சியம்மன் கோவிலுக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்ட தீபாரதனை தட்டு மூலமாக அம்மனுக்கும் சுவாமிக்கும் தீபாரதனை காண்பிக்கப்பட்டது.

தொடர்ந்து தங்கத்தால் ஆனபல நூற்றாண்டுகள் ஆண்டுகள் பழமைவாய்ந்த சந்தன கும்பா மற்றும் பன்னீர் தெளிப்பு கும்பா மூலமாக சுவாமிக்கும் அம்மனுக்கும் பன்னீர் தெளிக்கப்பட்டது

முன்னதாக திருக்கல்யாண நிகழ்ச்சிக்காக 30 லட்சம் மதிப்பிலான 2 டன் வண்ண மலர்கள் குறிப்பாக மதுரை மல்லிகை மற்றும் திண்டுக்கல், நிலக்கோட்டை, ஸ்ரீரங்கம், பெங்களூர், தாய்லாந்து உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் இருந்து வாசனை மிகுந்த வண்ண மலர்கள் கொண்டும்.

மேலும் ஸ்ரீவில்லிபுத்தூர் கிளி, நவ தானியங்களால் செய்யப்பட்ட பெயர்ப்பலகைகளால் திருக்க ல்யாண மேடை முழுவதும் அலங்காரம் செய்யப்பட்டிருந்தது.

கோவில் வளாகத்தை சுற்றிலும் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் வருகை தருவார்கள் என்பதால் 20 எல்இடி திரைகள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும் அதிக வெயிலின் தாக்கம் இருப்பதால் 100 டன் தற்காலிக ஏசி பொறுத்தப்பட்டது. 1 லட்சம் பைகளில் தண்ணீர் பாட்டில் மற்றும் தாலிகயிறு அடங்கிய பிரசாதம் வழங்கப்பட்டது. திருக்கல்யாண விழாவை முன்னிட்டு 3 ஆயிரம் காவல்துறையினர் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டார்கள்.

# அமைச்சர் நேருவுக்கு எதிராக வழக்குப்பதிவு செய்ய உத்தரவிடவில்லை: உயர் நீதிமன்றம் விளக்கம்

சென்னை: "நகராட்சி நிர்வாக துறையில் அதிகாரிகள் நியமனத்தில் நடந்த முறைகேடுகள் தொடர்பாக, அமைச்சர் நேருவுக்கு எதிராக வழக்குப் பதிவு செய்ய வேண்டும் என குறிப்பிட்டு உத்தரவில் கூறவில்லை.முறைகேடு தொடர்பாக வழக்குப் பதிவு செய்யுவே உத்தரவிடப்பட்டது" என சென்னை உயர் நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

நகராட்சி நிர்வாக துறையில், 2538 உதவி மற்றும் இளநிலை பொறியாளர்கள் உள்ளிட்ட அதிகாரிகள் நியமனத்துக்கு 634 கோடி ரூபாய் லஞ்சம் பெறப்பட்டுள்ளதாக கூறி, இதுசம்பந்தமாக வழக்குப்பதிவு செய்யும்படி, தமிழக டி.ஜி.பி.க்கு, அமலாக்கத் துறை கடிதம் அனுப்பியிருந்தது.இந்த கடிதத்தின் அடிப்படையில், வழக்குப்பதிவு செய்ய லஞ்ச ஒழிப்புத் துறைக்கு உத்தரவிடக் கோரி அதிமுக எம்.பி. இன்பதுரை சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்திருந்தார். இந்த வழக்கைவிசாரித்த உயர் நீதிமன்றம், அமலாக்கத் துறை கடிதத்தின் அடிப்படையில் உடனடியாக வழக்குப் பதிவு செய்ய லஞ்ச ஒழிப்புத் துறைக்கு உத்தரவிட்டிருந்தது.

இந்த உத்தரவின் அடிப்படையில் வழக்குப் பதிவு செய்யாத லஞ்ச ஒழிபுத் துறைக்கு எதிராக,இன்பதுரை தரப்பில் நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. இதேபோல, அதிகாரிகள் நியமன முறைகேடு தொடர்பாக வழக்குப்பதிவு செய்ய பிறப்பித்த உத்தரவை ரத்து செய்ய வேண்டும் என தமிழக அரசும், அமைச்சர் நேரு தரப்பிலும் மறு ஆய்வு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.



இந்தஅனைத்து வழக்குகளும், தலைமை நீதிபதி எஸ்.ஏ.தர்மாதிகாரி மற்றும் நீதிபதி ஜி. அருள்முருகன் அமர்வில்விசாரணைக்குவந்த போது, நேரு தரப்பில், வழக்குப்பதிவு செய்ய வேண்டும் என உத்தரவு பிறப்பிக்கும் முன் தனது தரப்பில் வாதங்களை முன் வைக்க வாய்ப்பளிக்கப்படவில்லை என தெரிவிக்கப்பட்டது.

அப்போது குறுக்கிட்ட நீதிபதிகள், அமைச்சர் நேருவுக்கு எதிராக வழக்குப் பதிவு செய்ய வேண்டும் என குறிப்பிட்டு உத்தரவில் கூறவில்லை.முறைகேடு தொடர்பாக வழக்குப் பதிவு செய்யவே உத்தரவிடப்பட்டுள்ளது எனத் தெரிவித்தனர். மேலும், இந்த வழக்கில் விரிவான வாதங்கள் வைக்க வேண்டும் என்பதால், விசாரணையை கோடை விடுமுறைக்கு பின் தள்ளிவைக்கலாம் என நீதிபதிகள் தெரிவித்தனர்.

அதுவரை வழக்குப்பதிவு செய்ய பிறப்பித்த உத்தரவை நிறுத்தி வைக்க வேண்டும் என நேருதரப்பில்கோரப்பட்டது. இதையடுத்து, எந்த உத்தரவும் பிறப்பிக்காமல் தமிழக அரசு மற்றும் நேருவின் மறு ஆய்வு மனுக்களையும், இன்பதுரையின் நீதிமன்ற அவமதிப்பு வழக்கையும் ஜூன் 4 வது வாரத்துக்கு நீதிபதிகள் தள்ளிவைத்தனர்.

# ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி செய்திக்குறிப்பு



ஈரோடு மாவட்டத்தில் எதிர்வரும் (01.05.2026) மே தினத்தை முன்னிட்டு அரசு மதுபானக் கடைகள், அதனுடன் இயங்கும் மதுக்கூடங்கள் மற்றும் எப்.எல்.1, எப்.எல்.2 மற்றும் எப்.எல்.3 மதுபான விடுதிகள்/ஹோட்டல்களில் உள்ள பார்கள் ஆகியவைமேற்கண்டதினத்தில்மூடப்பட வேண்டும் எனவும், அன்றைய தினத்தில் மது விற்பனை இல்லாத நாளாக (Dry Day) அனுசரிக்க வேண்டும் என அரசு உத்தரவிட்டுள்ளதைத் தொடர்ந்து 01.05.2026 அன்று முழுவதும் ஈரோடு மாவட்டத்தில்செயல்பட்டுவரும்அரசுமதுபானக் கடைகள், அதனுடன் இயங்கும் மதுக்கூடங்கள் மற்றும் எப்.எல்.1, எப்.எல்.2 மற்றும் எப்.எல்.3 மதுபான உரிமதலங்கள் மூடப்பட்டிருக்கும், அன்றைய தினத்தில் மதுபான விற்பனைகள் ஏதும் நடைபெறாது மேலும், அன்றைய தினம் மது விற்பனையில் ஈடுபடும் நபர்கள் மீது கடுமையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என தெரிவித்துள்ளார்.


# Who is UP's 'encounter specialist' IPS Ajay Sharma, whose deployment in Bengal caused stir

As if the ongoing state assembly elections in West Bengal were falling short of controversies, a new row erupted over the Election Commission's deployment of IPS officer Ajay Pal Sharma, popularly known as Uttar Pradesh's 'encounter specialist', as police observer for South 24 Parganas district.

Sharma's deployment comes ahead of second round of voting in West Bengal on Wednesday, April 29, leading to a major row between the incumbent Trinamool Congress and the Bharatiya Janata Party. While the BJP and the ECI said that Sharma has been deployed to ensure "free and fair voting" in the state, the Trinamool Congress and also Samajwadi Party leader Akhilesh Yadav claimed that the BJP is trying to tilt the vote in their favour by "deploying agents" to intimidate voters. Ajay Pal Sharma is a 2011 batch IPS officer of UP's cadre, currently posted as Additional Commissioner of Police (ACP) in Prayagraj.

He was born in October 1985 in Punjab's Ludhiana and is known for his tough policing style. Before becoming an IPS officer, Sharma was a dentist.

Sharma's role in several key security operation during his several postings across Uttar Pradesh earned him the reputation of "encounter specialist". After Sharma's deployment, BJP's Amit Malviya referred to him as 'Singham' of UP Police and shared a video of him warning TMC candidate's Jehangir Khan's supporters against intimidating voters. The video is in wide circulation on social media. "He wasted no time in setting the tone, firmly reading the riot act to the family members of Abhishek Banerjee's close aide, Jehangir Khan," Malviya wrote on X. Meanwhile, TMC





MP Mahua Moitra also did not shy away from throwing punches, sharing Sharma's video and warning him to "dial back the heroism a bit". In another post, Moitra tagged Sharma and wrote, "hope your policing skills are better than your dancing skills". BJP's West Bengal unit, on the other hand, backed Sharma said that he just "read the riot act to Bhaipo's henchman Jehangir Khan's family members."

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.